தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 17, வெள்ளிக்கிழமை.

மாசி 6, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு."

உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானை தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கம் உடையவர் எத்தனை சிதைவு வரினும் தளர மாட்டார்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

(அ) சுருக்க வெளியீட்டில் குறட்பாவும் விளக்கமும் இடம் பெறுதல.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, On a point of clarification, ஒவ்வொரு நாளும் சட்டப் பேரவையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டு செய்தித்தாள் என்ற குறிப்பினை எங்களுக்கெல்லாம் தருகிறீர்கள். அதிலே ஒரு குறை. ஒவ்வொரு நாளும் குறளின் ஒரு பாவை இங்கே சொல்லி அதற்கு அருமையான விளக்கத்தையும் தருகிறீர்கள். அதையும் அச்சிட்டு எங்களுக்குத் தந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்களே, தாங்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நன்றியுடன் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஆரம்ப நாளிலிருந்து சொன்னதையெல்லாம் எங்களுக்குச் சேர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படி வருமேயானால் அது பிறகு தங்கள் பெயராலே ஒரு புத்தகமாக "திருக்குறள் உரை" என்கின்ற அளவில் வெளிவருவதற்கும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் என்னுடைய சொந்த உரையைத்தான் ஒவ்வொரு முறையும் தரவேண்டியிருக்கும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்திருந்தேன். அதைபற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உரிமைப் பிரச்சினையில் தொடர்புடையவர் இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர் என்ற முறையில் அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அந்த விளக்கம் பெறப்பட்டதும் அது அவையில் எடுத்துக்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகளிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகளில் புழுங்கல் அரிசி கிடைக்காததும் சென்னையில் சில பகுதிகளிலுள்ள மக்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், செ. நூர்முகமது, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.